ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 10.1 – தாளதாமரை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 10.1 – தாளதாமரை

‡ தாள தாமரைத் ⋆
தடம் அணி வயல் திருமோகூர் ⋆
நாளும் மேவி நன்கமர்ந்து நின்று ⋆
அசுரரைத் தகர்க்கும் ⋆
தோளும் நான்குடைச் ⋆
சுரி குழல் கமலக் கண் கனிவாய் ⋆
காள மேகத்தை அன்றி ⋆
மற்றொன்றிலம் கதியே ‖ **10.1.1** ‖

இலம் கதி மற்றொன்றெம்மைக்கும் ⋆
ஈன் தண் துழாயின் ⋆
அலங்கல் அம் கண்ணி ⋆
ஆயிரம் பேர் உடை அம்மான் ⋆
நலம் கொள் நான்மறை வாணர்கள் வாழ் ⋆
திருமோகூர் ⋆
நலம் கழல் அவன் அடி நிழல் ⋆
தடம் அன்றி யாமே ‖ **10.1.2** ‖

அன்றி யாம் ஒரு புகல் இடம் ⋆
இலம் என்றென்றலற்றி ⋆
நின்று நான்முகன் அரனொடு ⋆
தேவர்கள் நாட ⋆
வென்றிம் மூ உலகளித்து ⋆

உழல்வான் திருமோகூர் ⋆
நன்று நாம் இனி நணுகுதும் ⋆
நமதிடர் கெடவே ‖ **10.1.3** ‖

இடர் கெட எம்மைப் போந்தளியாய் ⋆
என்றென்றேத்தி ⋆
சுடர் கொள் சோதியைத் ⋆
தேவரும் முனிவரும் தொடர ⋆
படர் கொள் பாம்பணைப் ⋆
பள்ளி கொள்வான் திருமோகூர் ⋆
இடர் கெட அடி பரவுதும் ⋆
தொண்டீர் ! வம்மினே ‖ **10.1.4** ‖

தொண்டீர் ! வம்மின் ⋆
நம் சுடர் ஒளி ஒரு தனி முதல்வன் ⋆
அண்ட மூ உலகளந்தவன் ⋆
அணி திருமோகூர் ⋆
எண் திசையும் ஈன் கரும்பொடு ⋆
பெரும் செந்நெல் விளைய ⋆
கொண்ட கோயிலை வலம் செய்து ⋆
இங்காடுதும் கூத்தே ‖ **10.1.5** ‖

கூத்தன் கோவலன் ⋆
குதற்று வல் அசுரர்கள் கூற்றம் ⋆
ஏத்தும் நங்கட்கும் ⋆
அமரர்க்கும் முனிவர்க்கும் இன்பன் ⋆
வாய்த்த தண் பணை வள வயல் சூழ் ⋆
திருமோகூர் ஆத்தன் ⋆

தாமரை அடி அன்றி ⋆
மற்றிலம் அரணே ‖ **10.1.6** ‖

மற்றிலம் அரண் ⋆
வான் பெரும் பாழ் தனி முதலாச் ⋆
சுற்றும் நீர் படைத்து ⋆
அதன் வழித் தொல் முனி முதலா ⋆
முற்றும் தேவரோடு ⋆
உலகு செய்வான் திருமோகூர் ⋆
சுற்றி நாம் வலம் செய்ய ⋆
நம் துயர் கெடும் கடிதே ‖ **10.1.7** ‖

துயர் கெடும் கடிதடைந்து வந்து ⋆
அடியவர் தொழுமின் ⋆
உயர் கொள் சோலை ⋆
ஒண் தடம் அணி ஒளி திருமோகூர் ⋆
பெயர்கள் ஆயிரம் உடைய ⋆
வல் அரக்கர் புக்கழுந்த ⋆
தயரதன் பெற்ற ⋆
மரதக மணித் தடத்தினையே ‖ **10.1.8** ‖

மணித் தடத்தடி மலர்க்கண்கள் ⋆
பவளச் செவ்வாய் ⋆
அணிக்கொள் நால் தடம் தோள் ⋆
தெய்வம் அசுரரை என்றும் ⋆
துணிக்கும் வல் அரட்டன் ⋆
உறை பொழில் திருமோகூர் ⋆

நணித்து நம்முடை நல் அரண் ⋆
நாம் அடைந்தனமே ‖ **10.1.9** ‖

நாம் அடைந்த நல் அரண் ⋆
நமக்கென்று நல் அமரர் ⋆
தீமை செய்யும் வல் அசுரரை ⋆
அஞ்சிச் சென்றடைந்தால் ⋆
காம ரூபம் கொண்டு ⋆
எழுந்தளிப்பான் திருமோகூர் ⋆
நாமமே நவின்றெண்ணுமின் ⋆
ஏத்துமின் நமர்காள் ! ‖ **10.1.10** ‖

‡ ஏத்துமின் நமர்காள் ⋆
என்று தான் குடம் ஆடு கூத்தனை ⋆
குருகூர்ச் சடகோபன் ⋆
குற்றேவல்கள் ⋆
வாய்த்த ஆயிரத்துள் இவை ⋆
வண் திருமோகூர்க்கு ⋆
ஈத்த பத்திவை ஏத்த வல்லார்க்கு ⋆
இடர் கெடுமே ‖ **10.1.11** ‖

அடிவரவு — தாளதாமரை இலம்கதி அன்றியாம் இடர்கெட தொண்டீர் கூத்தன் மற்றிலம் துயர்கெடும் மணித்தட நாமடைந்த ஏத்துமின் கெடும்

தாளதாமரை முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்